**தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை இல. 3/2015**

பீடி/சீபீபி/4/1/2-2016
தேசிய வரவு செலவுத்திட்டத்
திணைக்களம்
பொதுத் திறைசேரி
கொழும்பு - 01
29.07.2015

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
நியதிச் சட்ட சபைகள் மற்றும் நிறுவனங்களின் தலைவர்கள் அனைவருக்கும்

**2016 – வரவு செலவுத்திட்ட அழைப்பு**
**2016 வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கான வழிகாட்டல்களும் அறிவுறுத்தல்களும்**

**1. அறிமுகம்**

நாட்டின் பொருளாதார வளர்ச்சியினை துரிதப்படுத்தும் நோக்குடைய அரசாங்க கொள்கையினை அடிப்படையாகக் கொண்டு 2016-2018 ஆம் ஆண்டிற்கான நடுத்தரக்கால வரவு செலவுத்திட்ட வேலைச் சட்டகத்திற்குள் 2016 ஆம் ஆண்டிற்கான தேசிய வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்படும்.

அரசாங்க வளங்கள் வினைத்திறனுடனும் பயன் வலுவுடனும் பயன்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்தும் வகையில் வரவு செலவுத்திட்டத்தினைத் தயாரிப்பதற்கான புதிய நிகழ்ச்சித்திட்டங்களை மேம்படுத்துவதற்கு தற்பொழுது எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இந்தவகையில், அரசாங்க செலவினங்களை முழுமையாக மீளாய்வு செய்வதின் ஊடாக பூச்சிய அடிப்படை வரவு செலவுத்திட்டத் தயாரிப்புச் செயன்முறையினை அறிமுகப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பூச்சிய அடிப்படை வரவு செலவுத்திட்டத் தயாரிப்பானது, திட்டமிடல், வரவுசெலவுத் திட்டத் தயாரிப்பு மற்றும் மீளாய்வுச் செயன்முறையுடன் தற்பொழுது காணப்படும் இணைப்புகளை ஏற்படுத்துகின்ற வரையறுக்கப்பட்ட வளங்களைப் பயன்படுத்தும் மாற்றீடு மற்றும் வினைத்திறன்மிக்க முறைமைகளை இது இனம் காண்கின்றது. முறைமை மீளாய்வு மற்றும் தற்பொழுது நடைமுறையில் காணப்படும் நிகழ்ச்சித்திட்ட மட்டங்களின் நிதியளிப்பு மற்றும் செயலாற்றுகையினை நியாயப்படுத்தல் என்பவற்றுக்கு கவனம் செலுத்துவதன் மூலம் வளங்களின் மீள் ஒதுக்கீட்டுக்கு உகந்த நன்மதிப்பை வழங்குகின்ற இலகுவான முகாமைத்துவ முறைமையொன்றாகும்.

**2. பேரண்ட பொருளாதார வேலைச்சட்டகம்**

பொருளாதார வளர்ச்சியினை 8 சதவீதத்தினை விட உயர்ந்த நிலையில் அடைந்துகொள்ளும் வகையில், பொருளாதாரத்தில் மொத்த முதலீட்டு மட்டம் மொ.உ. உற்பத்தியில் தனியார் முதலீடுகளாக ஏறக்குறைய 23-24 சதவீதம் எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன் அரசாங்க முதலீடு நடுத்தர காலத்தில் மொ.உ. உற்பத்தியில் ஆகக்குறைந்தது 6-7 சதவீதமாக அதிகரிக்கப்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது.

அதேபோன்று, எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார வளர்ச்சியினை அடைந்துகொள்வதற்காக 2018 ஆம் ஆண்டளவில் மொ.உ. உற்பத்தியில் இல் 17 சதவீதமான அரசாங்க வருமானத்தை அடைந்து கொள்வதற்கான அவசிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. எனவே, மேலே குறிப்பிட்ட பேரண்டப் பொருளாதார இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நிறுவன மற்றும் வருமானத் துறை மறுசீரமைப்புகளையும் மீள் கட்டமைப்புகளையும் அறிமுகப்படுத்த வேண்டியது அத்தியாவசியமாகும்.

## 3. வரவு செலவுத்திட்ட வேலைச்சட்டகம்

வரவு செலவுத்திட்ட வேலைச்சட்டகத்தில் அரசாங்க வருமானம் மற்றும் செலவினம் தொடர்பான சிறந்த ஒப்பீட்டாய்வு பொருளாதாரத்தின் நிலையான வளர்ச்சியினை உறுதிப்படுத்த முடியும். இந்தவகையில், பேரண்டப் பொருளாதார இலக்குகள் மற்றும் தேசிய அபிவிருத்தி கட்ட

இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள பல்வேறு அமைச்சுக்களுக்குள் செலவின வரையறைகளுக்கான துறைரீதியான குழுவாக்கம் உள்ளடக்கப்படும். இரட்டை வேலை, ஒன்றோடொன்று ஒத்த வேலைகள் என்பவற்றை தவிர்க்கும் வகையிலும் மற்றும் வளங்களின் வினைத்திறன் மிக்க பகிர்வினை மேற்கொள்வதற்கும் பூச்சிய அடிப்படை வரவு செலவுத்திட்டத் தயாரிப்புச் செயன்முறையுடன் ஒன்றிணைக்கப்படும்.

எழுமாறான துறைரீதியான வரையறைகளின் அடிப்படையில், தொடர்புடைய அமைச்சுக்களின் செயலாளர்கள், பின்வரும் அடிப்படையில் ஒவ்வொரு அமைச்சுக்களுக்குமான வரையறைகளை இனம் காண்பதற்கான வரவு செலவுத்திட்டக் கலந்துரையாடலுக்கு அழைக்கப்படுவர். அமைச்சுக்களின் செயலாளர்கள் செலவினங்களை மதிப்பீடு செய்யும் பொழுது பிரதான தொழிற்பாடுகளுடன் தொடர்பான இறுதி வெளியீடு விளைவுகளை அடைந்துகொள்தல் மற்றும் அமைச்சுக்கள்/ திணைக்களங்கள்/ நிறுவனங்களின் செயற்பாடுகளை உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுவர்.

- கட்டம் 1 – அமைச்சுக்களின் தொழிற்பாட்டுக் குழுக்கள் மற்றும் தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் பதவியினருடன் மீண்டெழும் செலவினம் தொடர்பான கலந்துரையாடல்கள்.
- கட்டம் 2 – திறைசேரி செயலாளரின் தலைமையில் அமைச்சுக்கள் வாரியான மூலதனச் செலவின மதிப்பீடுகள் தொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெறும்.

## 4. மதிப்பீடுகளைத் தயாரித்தல்

நடுத்தரக் கால வரவு செலவுத்திட்ட வேலைச்சட்டகத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டுக்கான செலவின மதிப்பீடுகளை பின்வரும் அமைப்பில் பூச்சிய அடிப்படை வரவு செலவுத்திட்டத் தயாரிப்பு முறைமைகளுக்கமைவாக தயாரிப்பதற்கு அனைத்து செலவின முகவர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

(i) தற்போதைய பின்னணியில் தொடர்புகளை மதிப்பீடு செய்வதற்கும், தொடர்புடைய செயற்பாடுகள், இரட்டை வேலைகள், வீண் விரயம் மற்றும் இடைவெளிகளை இனம் காண்பதற்கும் அமைச்சுக்கள்/திணைக்களங்கள்/நிறுவனங்களின் பணிக்கூற்று நோக்கங்கள் மற்றும் தொழிற்பாடுகளை மீளாய்வு செய்தல்.

(ii) நோக்கங்களுக்கு அமைவாக நிகழ்ச்சித்திட்டங்கள் கருத்திட்டங்கள் உப கருத்திட்டங்கள் அனைத்தையும் முன்னுரிமைப்படுத்தலும் குறைந்த முன்னுரிமைகள் மற்றும் இல்லாதொழிக்க முடியுமான தொடர்பற்ற செயற்பாடுகளை இனம் காணலும்.

(iii) தேசிய முன்னுரிமைகள் இலக்குகளுக்கு ஏற்றவகையில் நிகழ்ச்சித்திட்டங்கள் கருத்திட்டங்கள் உப-கருத்திட்டங்கள் அளைத்தையும் முன்னுரிமைப்படுத்தலும் குறைந்த முன்னுரிமைகள் மற்றும் இல்லாதொழிக்க முடியுமான தொடர்பற்ற செயற்பாடுகளை இனம்காணலும்.

(iv) எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளுக்கு ஏற்றவகையில் அனைத்து செயற்பாடுகளையும் துறைரீதியான இலக்குகளுடன் இணைத்தல்.

(v) செலவின அலகின் அடிப்படையில் கருத்திட்டங்கள்/உபகருத்திட்டங்களின் செலவுகளை மதிப்பீடு செய்தல்.

பூச்சியம் "0" என்ற ஆரம்பப் புள்ளியில் வருடாந்த வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்படுவதுடன் செலவின விடயங்கள் குறித்த ஆண்டுக்கான அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடுகளுக்குள் வரையறுக்கப்படுதல் வேண்டும். எனவே, முன்கொண்டு வரப்படும் செலவினங்கள் தொடர்பான எந்தவொரு பிரச்சினைகளும் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

இச்சுற்றறிக்கையின் **பின்னிணைப்பு 1** இல் குறிப்பிடப்பட்ட வழிகாட்டலுக்கு அமைவாக ஒவ்வொரு செயற்பாட்டுக்குமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும்.

## 4.1 செலவின எதிர்வுகூறல்கள்

செலவின எதிர்வுகூறல்கள் மற்றும் மதிப்பிடல் செயலாற்றுகை இலக்குகளினைத் தயாரிப்பதில் பின்வரும் விடயங்கள் கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்;

(i) **பணவீக்கம்:** 2016 இற்கான மதிப்பீடுகளுக்கு திறைசேரியானது பணவீக்க திருத்தங்களை மேற்கொள்ளும் என்ற வகையில் நிரல் அமைச்சுக்களினால் பணவீக்கம் தொடர்பில் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

(ii) **பயன்பெறுநர்களின் எண்ணிக்கையில் வேறுபாடுகள்:** பயன்பெறுவதற்கு உரித்துடைய நபர்களின் எண்ணிக்கை மதிப்பிடப்பட்டதைவிட அதிகரித்தல் அல்லது குறைவடைதலில் பயன்பெறல் நிகழ்ச்சித்திட்டங்களுக்கான (ஓய்வூதியம், சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் மற்றும் பாடசாலை சீருடைகள் போன்ற) செலவினங்களை செலவின முகவராண்மைகள் திருத்துதல் வேண்டும்.

(iii) **சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகளின் திருத்தங்கள்:** நடுத்தரக் காலத்திற்கான தமது எதிர்வுகூறல்கள் சம்பளத் திருத்தங்களுக்கான ஏற்பாடுகளை திறைசேரி வேறாக அவர்களுக்கு வழங்கும் என்ற வகையில் செலவின முகவர்கள் அவற்றினை உள்ளடக்கக்கூடாது.

(iv) **கொள்வனவுத் திட்டங்கள்:** பொருட்கள் மற்றும் சேவைகளின் கொள்வனவு மீதான அனைத்து மதிப்பீடுகளும் கொள்வனவு வழிகாட்டல்களின் நியதிகளுக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட கொள்வனவு திட்டத்தின் அடிப்படையில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கொள்வனவுத் திட்டங்கள் முடிவானதாகும்வரை எவ்வித நிதி ஒதுக்கீடுகளும் வழங்கப்பட மாட்டாது. வரவு செலவுத்திட்டத்திற்கான செலவினத்தினைக் கணக்கீடு செய்தல் கொள்வனவுத் திட்டங்களின் அடிப்படையில் இருத்தல் வேண்டும்.

## 4.2 மீண்டெழும் செலவினம்

2015 ஜுன் 30 ஆந் திகதி அன்றுள்ளவாறு அனுமதிக்கப்பட்ட பதிவியணிக்குள் உண்மையான ஊழியர் எண்ணிக்கையின் அடிப்படையில் ஆளுக்குரிய வேதனாதிகளுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கமைவாக அனைத்து சம்பளங்களும் கொடுப்பனவுகளும் கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். ஏனைய மீண்டெழும் செலவினத் தேவைகளை 2015 மட்டத்தில் பேணப்படுதல் எவ்வாறாயினும், 2016 இற்கான மீண்டெழும் செலவினத்தினை தீர்மானிப்பதற்கு முன்னர் செலுத்தப்பட வேண்டியுள்ள ஏதேனும் நிலுவைகள் அல்லது ஏதேனும் கடப்பாடுகளை உறுதிப்படுத்துவதற்கு அமைச்சுக்களிடம் வேண்டப்பட்டுள்ளது.

## 4.3 மூலதனச் செலவினம்

பின்வருவனவற்றுக்கு மூலதனச் செலவினங்கள் வேறாக குறிப்பிடப்படுதல் வேண்டும்;

(அ) வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்கள் மற்றும் உள்நாட்டு நிதி தேவைப்பாடு காணப்படுபவையும்.

(ஆ) உள்நாட்டு மூலங்களினது பெறமுடியுமான ஏனைய மூலதனச் செலவினங்கள்.

ஏனைய மூலதன செலவினங்களுக்கான வழங்கலினை ஒதுக்கீடு செய்வதில், பின்வரும் விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கும் வகையில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்;

(i) நிர்மாணப் பணிகளை நிறைவுசெய்தல் (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதிவழங்கல்)

(ii) மூலதன சொத்துக்களின் புனரமைப்பும் மேம்பாடும்.

(iii) மேலே (i) மற்றும் (ii) இற்கான நிதி ஏற்பாட்டினைச் செய்ததன் பின்னர் குறித்த வரையறைக்குள் புதிய கருத்திட்டங்களை சேர்த்துக் கொள்ள முடியும்.

அரசாங்க முக்குரிமைகளின் அடிப்படையில் மேலே (i) மற்றும் (ii) விடயங்களுக்குத் தேவையான நிதி ஒதுக்கீட்டினை மேற்கொண்டதன் பின்னர் செலவின வரையறைகளுக்குள் வளங்களை ஒதுக்கீடு செய்வதற்கு செலவின முகவராண்மைகளுக்கு சுதந்திரம் காணப்படுகின்றது. எவ்வாறாயினும், அதிக முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய செயற்பாடுகளுக்கு போதிய ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படவில்லை என திறைசேரி அவதானிக்கும் சமயத்தில், சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடி ஒதுக்கீட்டு வரையறைக்குள் நிதி ஏற்பாடுகளை திறைசேரி மீள் ஒழுங்குபடுத்தும்.

## 5. பிரதான செயலாற்றுகை சுட்டிகள்

ஒவ்வொரு கருத்திட்டம் தொடர்பிலும் செயலாற்றுகை சுட்டிகளை குறிப்பீடு செய்வதற்கு 2016 ஆம் ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் முயற்சியொன்று மேற்கொள்ளப்படும். இந்தவகையில், **பின்னிணைப்பு 2** இல் தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தினைப் பயன்படுத்தி கருத்திட்டத்தினைக் குறிப்பீடு செய்தல் தொடர்பான ஆகக் குறைந்தது இரண்டு சுட்டிகளை குறிப்பீடு செய்வதற்கு செலவின முகவராண்மைகள் கேட்கப்பட்டுள்ளன. பிரதான செயலாற்றுகை சுட்டிகளை அடிப்படையாகக் கொண்டு எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை ஏதேனும் செலவின முகவராண்மை அடையவில்லையாயின் அடுத்துவரும் வருடத்தில் வள ஒதுக்கீட்டில் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தும்.

## 6. ஏனைய தகவல்கள்

### 6.1 பதவியணி தகவல்கள்

**பின்னிணைப்பு 3** இல் வழங்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தினைப் பயன்படுத்தி 2015.06.30 அன்றுள்ளவாறு விபரமான பதவியணி பற்றிய தகவலினை சமர்ப்பிப்பதற்கு அனைத்து செலவின முகவராண்மைகளும் வேண்டப்பட்டுள்ளன.

### 6.2 வானங்கள் பற்றிய தகவல்கள்

**பின்னிணைப்பு 4** இல் தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்துக்கு அமைவாக 2015.06.30 அன்றுள்ளவாறு வாகனங்கள் பற்றிய தரவுகளை இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்குமாறு அனைத்து செலவின முகவராண்மைகளும் கேட்கப்பட்டுள்ளன.

### 6.3 கட்டிட நிர்மாணம்

அரசாங்க நிறுவனங்களுக்கு புதிய கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கான வேண்டுகோள்கள் பெருமளவில் காணப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது. சேவை வழங்கல் மற்றும் வழங்கலின் ஆகக்கூடிய பயன்பாடு என்பவற்றினை உறுதிப்படுத்துவதற்கு ஒரே கூரையின் கீழ் பல அரசாங்க நிறுவனங்களை அமைப்பதற்கு பல் மாடிகளைக் கொண்ட அலுவலகத் தொகுதியொன்றினை நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. எனவே, அமைச்சுக்கள் திணைக்களங்கள் நிறுவனங்கள் என்பவற்றுக்கான புதிய அலுவலகத் தேவைப்பாடுகள் தொடர்பான தகவல்களை கவனத்திற் கொள்வதற்காகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

### 6.4 நியதிச் சட்ட சபைகள் மற்றும் நிறுவனங்கள்

நியதிச் சட்ட சபைகள் மற்றும் நிறுவனங்கள் செலவின தலைப்பு குறியீடுகளினை அடிப்படையாகக் கொண்டு அவற்றின் வருடாந்த வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளைத்

தயாரித்தல் வேண்டும். சம்பந்தப்பட்ட நியதிச்சட்ட சபைகள் மற்றும் நிறுவனங்களின் நிரல் அமைச்சுகளின் தலைவர்கள் ஒவ்வொரு நிறுவனத்தினதும் யாப்பில் குறிப்பிடப்பட்டதுடன் தொடர்பான இலாபத்தன்மை மற்றும் அவற்றின் தொழிற்பாடுகளை மீளாய்வு செய்வதுடன் அவற்றை மீள் கட்டமைப்பு செய்வதற்கான ஏதேனும் தேவைப்பாடுகள் காணப்படுமாயின் காலம் வரையறுக்கப்பட்ட இலக்குகளை வழங்குதல் வேண்டும்.

## 7. ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமையினைச் செயற்படுத்தல்

கணனி முறைமையொன்றினூடாக செலவிடல் முகவராண்மைகளிலிருந்து வரவு செலவுத்திட்டம் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கமைவாக, ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமையொன்று 2016 வரவு செலவுத்திட்டத்தினைத் தயாரிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் வகையில் திறைசேரியினால் தற்பொழுது செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

## 8. வரைவு செலவின மதிப்பீடுகளைச் சமர்ப்பித்தல்

மதிப்பீடுகளைத் தயாரிப்பதனை விரைவுபடுத்தும் வகையில், 3/2015 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கைக்கு பின்னிணைப்பாக "தேசிய வரவு செலவுத்திட்டம் - 2016" என்ற தலைப்பில் www.treasury.gov.lk என்ற திறைசேரியின் இணைய தளத்தில் Word/Excel வடிவத்தில் தேவையான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கான பின்னிணைப்புகளையும் Word/Excel வடிவத்தில் பதிவிறக்கம் செய்ய முடியுமென்பதுடன் அவற்றினை அச்சிடவும் முடியும். அனைத்து செலவின முகவராண்மைகளும் குறித்த படிவங்களை பூர்த்தி செய்து 2016 வரைவு வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளை 2015 ஆகஸ்ட் 10 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்க வேண்டுமென கேட்கப்பட்டுள்ளன. தயாரிக்கப்பட்ட நிறுவனங்களின் வரவு செலவுத்திட்டத்தின் பிரதியினை பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிப்பதற்கும் நிறுவனங்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. மதிப்பீடுகள் மற்றும் வரவு செலவுத்திட்ட வேண்டுகோள்களை மீளாய்வு செய்யும் வகையில் மதியுரை கொத்தணிக் கூட்டங்கள் 2015 ஆகஸ்ட் 10 முதல் 28 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் இடம்பெறும்.

நிதி ஒதுக்கீடு மிகவும் அவசியமான பிரதேசங்களுக்கு அரிதான வளங்களை தேவைக்கேற்றவாறு ஒதுக்கீடு செய்வதனை உறுதிப்படுத்துவதற்கும் சிறந்த நிதி முகாமைத்துவத்தினூடாக அரசாங்க செலவினத்தினை வினைத்திறனுடனும் பயன்வலுமிக்கதாகவும் அதிகரிப்பதற்கும், தமது நிறுவனங்கள் தொடர்பான மதிப்பீடுகளைத் தயாரிப்பதில் செலவின அலகுகளின் தலைவர்கள் அனைவரினதும் தனிப்பட்ட பங்குபற்றுதல் அவசியமாகும்.

மேலதிக விபரங்களுக்கு, உங்களது அமைச்சு / செலவின அலகிற்கு நியமிக்கப்பட்டுள்ள தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் அலுவலர்களை தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

**ஒப்பம் ஆர்.எச்.எஸ். சமரதுங்க**
**திறைசேரி செயலாளர்**

பிரதிகள்:
(i) சனாதிபதியின் செயலாளர்
(ii) பிரதமரின் செயலாளர்
(iii) அமைச்சரவையின் செயலாளர்
(iv) கணக்காய்வாளர் நாயகம்